ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2324/18 - 2023 මාර්තු මස 21 වැනි අඟහරුවාදා - 2023.03.21

2324/18 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: AMB/LD/1/AQ/48 (iv).
காணி அமைச்சின் குறிப்பு இல.: 13/97/PC/561.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத் தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், காலி மாவட்டம், அம்பலாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில், 86 D, தல்கஸ்கொட கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. 4449, 2023.01.19 ஆந் திகதிய ஆரம்ப வரைபடத்தின் மொத்த விஸ்தீரணம் 1.0930 ஹெக்டயாரை உடைய பின்வருமாறு காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகள் இரண்டின் (02) விபரங்கள் பின்வருமாறு :-

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: தல்கஸ்கொடபெத்த; விபரம்: விளையாட்டு மைதானம்; உரிமை கோருவோர்: 01. பி. எம். எம். டி சில்வா ஜயசிங்ஹ, இல. 14, கிதுல்வத்தை ஒழுங்கை, பொரெல்ல, கொழும்பு 08. 02. சஜினி பவித்ரா டி சில்வா ஜயசிங்ஹ, சோமி செவன, பியதிகம, கிங்தொட்ட, காலி. 03. சஹன் சந்திக மொஹான் டி சில்வா ஜயசிங்ஹ; விஸ்தீரணம்: 1.0593 ஹெக்டயார்.

**துண்டு இல. 02**

காணியின் பெயர்: தல்கஸ்கொடபெத்த; விபரம்: நுழைவு வீதி; உரிமை கோருவோர்: 01. பி. எம். எம். டி சில்வா ஜயசிங்ஹ, இல. 14, கிதுல்வத்தை ஒழுங்கை, பொரெல்ல, கொழும்பு 08. 02. சஜினி பவித்ரா டி சில்வா ஜயசிங்ஹ, சோமி செவன, பியதிகம, கிங்தொட்ட, காலி. 03. சஹன் சந்திக மொஹான் டி சில்வா ஜயசிங்ஹ; விஸ்தீரணம்: 0.0337 ஹெக்டயார்.

1A - G 39157 — 23 (2023/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணித்துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு அம்பலாங்கொடை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன் வெளிப் படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

எம். ஜி. ஹசந்தி நிரோஷனி,
பிரதேச செயலாளர்,
அம்பலாங்கொடை.

பிரதேச செயலகம்,
அம்பலாங்கொடை.
2023, மாச்சு 14.

EOG 03 - 0274

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/PHT/4/6/1/12.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின்
குறிப்பிலக்கம்: 4-3/18/2020/WS/95.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவில் இல. 984 ஐக் கொண்ட பூட்டாவத்த வடக்கு கிராம அலுவலர் பிரிவில் கந்தாகுலை கிராமத்திலமைந்த நில அளவையாளர் நாயகம் சார்பாக கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் அதிபதியினால் 2023.02.24 ஆந் திகதியிடப்பட்டு அளந்து தயாரிக்கப் பட்டு அனுமதிக்கப்பட்ட இலக்கம் C.M. 321171 வலய இலக்கம் 01 இல் 01 ஆம் இலக்க படிவத்தில் காணித்துண்டு இலக்கம் 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள நாரங்கடுவ வத்த அல்லது காலியப்பெருமால் வத்த என்னும் காணியில் சுமார் 0.0683 ஹெக்டயார் முழு அளவிலான விஸ்தீரணம் கொண்ட கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டின் விபரங் கள் பின்வருமாறு :-

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: நாரங்கடுவ வத்த அல்லது காலியபெருமால் வத்த; உரிமை கோருவோர்: 01. திரு. பீ. ஜி. வர்ணகுலசூரிய, இல. 145, கந்தாகுலை, தலாத்துஓய. 02. திருமதி ஆர். எம். பண்டார மெனிகே, இல. 145, கந்தாகுலை, தலாத்து ஓய; விஸ்தீரணம்: 0.0683 ஹெக்டயார் (27 பேர்ச்).

**காணியின் எல்லைகள்:**

வடக்கு: கந்தாகுலை (ஒரு பகுதி); கிழக்கு: கந்தாகுலை (ஒரு பகுதி); தெற்கு: கந்தாகுலை (ஒரு பகுதி); மேற்கு: கந்தாகுலை (ஒரு பகுதி).

மேற்குறித்த காணித் துண்டுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத் தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். கே. சாகரிகா தில்ஹானி,
பிரதேச செயலாளர்,
பாத்தஹேவாஹெட்ட.

பிரதேச செயலகம்,
பாத்தஹேவாஹெட்ட,
தலாத்துஓய
2023, மாச்சு 13.

EOG 03 - 0275

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.